0218

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்**

**இறுதிப் பரீட்சை 2025/ 2026**

# LLU 3261/ LWU1161- சட்டத்தை அறிந்துகொள்ளல்

**காலம் - இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**திகதி : 06 ஜனவரி 2026** **நேரம்: பிப. 01.30 – பி.ப. 03.30**

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை : (06)**

**<u>நான்கு (04) வினாக்களுக்கு</u> மாத்திரம் விடையளிக்குக.**

**ஒவ்வொரு வினாவும் 25 புள்ளிகளுக்கு உரியது.**

1. (I)கீழுள்ள வழக்குகளின் நியாயாதிக்கங்களுக்கான பொருத்தமான நீதிமன்றத்தை தெரிவுசெய்க. உமது விடைக்கான காரணங்களை வழங்குக.

   (அ)ஒரு சிறிய குற்றம் இழைத்தமைக்காக சமன் என்பவன் பொலிசாரால் கைது செய்யப்பட்டான். அவன் பொலிஸ் காவலில் இருந்த போது, பொலிசாரால் தூற்றப்பட்டு, தாக்கப்பட்டான். அவன் அரச அதிகாரசபை ஒன்றினால் கொடுரமாகவும், கீழ்நிலைப்படுத்தப்பட்டும் நடாத்தப்பட்டதாக கருதுகிறதுடன் , வழக்கு ஒன்றை தாக்கல் செய்யவும் விரும்புகிறான்.

   (ஆ)காந்தி மற்றும் நிமல் ஆகியோர் 5 வருடங்களாக திருமண உறவில் உள்ளனர். அவர்கள் தற்போது சட்டபூர்வமாக பிரிவதற்கும் , பிள்ளையின் கட்டுக்காவல் மற்றும் பராமரிப்பு என்பன தொடர்பில் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் விரும்புகின்றனர்.

   (இ) ஒரு நெருக்கமான பேருந்தில் இருந்து பணப்பை ஒன்றை அதன் உரிமையாளர் அறியாத போது சமீர என்பவன் திருடினான். பேருந்தின் நடத்துனர் சம்பவத்தை அதிகார சபைகளிற்கு தெரிவித்தார்.

   (05 x 3= 15 புள்ளிகள்)

   (II) இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் ஐந்து நியாயாதிக்க அதிகாரங்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளங்குக.

   (10 புள்ளிகள்)

2. (I) “ அரசியலமைப்பு ஆனது இலங்கையின் மீயுயர் சட்டமாக கருதப்படுகிறது”. இக் கூற்றை அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை கருத்தேற்புகளுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

   (10 புள்ளிகள்)

   (II) இலங்கையின் 1978 ஆம் ஆண்டைய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் எவை? பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

   (15 புள்ளிகள்)

3. (I) “ சகல நர்களும் ஒப்பந்தமொன்றில் ஈடுபடுத்துவதற்கான சுதந்திரத்தைக் கொண்டுள்ளனர். ஆயினும் சட்டமானது முழுமையான ஒப்பந்த தகைமையை சில நபர்களுக்கு வழங்குவதை தடைசெய்கிறது.” ஒப்பந்த திறத்தவர்களின் தமைமையுடன் தொடர்புறுத்தி இக்கூற்றை சுருக்கமாக ஆராய்க.

   (10 புள்ளிகள்)

(II) கொடைமுனைவு மற்றும் கொடைமுனைவிற்கான அழைப்பிதழ் என்பனவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை ஆராய்க.

(07 புள்ளிகள்)

(III) ஒப்பந்த மீறல் ஒன்றிற்கு கிடைக்கத்தக்க நிவாரணங்களை ஆராய்க.

(08 புள்ளிகள்)

4. (I) ரஷ்மி என்பவள் " குயிக் மார்ட்" எனும் சிறிய கடையொன்றை நடத்துகிறாள். கடந்த வாரம் அவளது கடையில் சில வாடிக்கையாளர்களுக்கு சிரமங்கள் ஏற்பட்டன. சீனி, சமைக்கும் எண்ணெய் முதலியனவற்றை அவள் கொண்டிருந்த போதும், அவை "சிறப்பு வாடிக்கையாளர்களுக்கு சேகரிக்கப்பட்டவை" எனக் கூறப்பட்டு, விற்பனை செய்வதற்கு மறுக்கப்பட்டது, அவள் ரூ. 1200 பெறுமதியான சமைக்கும் எண்ணைய் போத்தல் ஒன்றை ரூ.1500 இற்கு விற்பனை செய்தாள். ரஷ்மி பெரியளவாலான அரிசி மற்றும் மா என்பவற்றை தன் களஞ்சியத்தில் கொண்டிருந்த போதும், அவற்றிற்கு தட்டுட்பாட்டை ஏற்படுத்தி, அவற்றை விற்பனை செய்யவில்லை. அவளது கடையில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாததுடன் , வாடிக்கையாளர்கள் தமது கொள்வனவிற்கான பற்றுச் சீட்டுக்களையும் பெறவில்லை. அவள் "சகல இடங்களிற்கும் முழுமையாக பாதுகாப்பானது." எனும் சுத்தம்செய்யும் உற்பத்தி ஒன்றை , அது சில பொருட்களின் மீது சேதத்தை ஏற்படுத்ததும் என்ற போதும் விளம்பரப்படுத்தினாள்.

மேலுள்ள சந்தர்ப்பத்துடன் தொடர்புறுத்தி, 09 ஆம் இலக்க 2003 ஆம் ஆண்டின் நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் கீழ் ரஷ்மி இழைத்துள்ள குற்றங்களை இனம்கண்டு , விளக்குக.

(15 புள்ளிகள்)

(II). 9ஆம் இலக்க 2003 ஆம் ஆண்டின் நுகர்வோர் நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் கீழ் ஆணையாளரின் கடமைகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

5. (I) வேறுபட்ட தொழில் வகைகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(II) நதீஷா என்பவள்" சன்ரைஸ் சேவிஸர்ஸ் பிரைவட் லிமிடட்" என்று அழைக்கப்பட்ட ஒரு தனியார் கம்பனிக்கு வரவேற்பாளர் சேவைகளை வழக்குகிறாள். அவள் கம்பனியின் முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்பட்ட குறித்த வேலை நேரங்களில் பணிபுரிவதுடன், அவளது தினசரி தொழிற் கடமைகள் தொடர்பில் கம்பனியின் முகாமையாளரின் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு தேவைப்படுத்தப்படட்டு இருக்கிறாள். கம்பனி ஆனது அவளது பணியை மேற்பார்வை செய்வதுடன், அவளது பணி எவ்வாறு, எப்போது புரியப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கிறது. நதீஷா கம்பனியின் உபகரணங்களை பாவனை செய்வதுடன், அவளது வருகையை தினமும் பதிவுசெய்தும், நிலையான ஒரு ஊதியத்தையும் பெறுகிறாள். எவ்வாறாயினும் , கம்பனி ஆனது, நதீஷா ஒரு சுதந்திர ஒப்பந்தக்காரர் என்றும் ஒரு ஊழியர் அல்ல என்றும் கோருகிறது.

மேலுள்ள நிகழ்வுகளின் அடிப்படையில் , நதீஷாவின் பணி ஆனது ஒரு வேலை ஒப்பந்தமா, அல்லது வேலைக்கான ஒப்பந்தமா என ஆராய்க.

(15 புள்ளிகள்)

6. பின்வரும் தலைப்புகளில் இருந்து ஏதேனும் **ஐந்து (05)** குறித்து சிறுகுறிப்புகள் எழுதுக.
   (I) சட்டத்தின் தோற்றுவாய்கள்.
   (II) ஆங்கிலச் சட்டம்
   (III) அடிப்படை உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள்
   (IV) கொடைமுனைவை முடிவுறுத்தல்
   (V) நுகர்வோர் உரிமைகள்
   (VI) ஒப்பந்தத்தின் விதிவிலக்கு வாசகங்கள்

(05x 05 = 25 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது